1969 மார்ச் 8]

இதைக் கொடுப்பதற்கு ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட் விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கென்று ஒரு போர்டு இருக்கிறது. அதிலும் இது பரிசீலிக்கப்படுகிறது. அதற்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கும் ஒரு லிமிட்டுக்கு மேலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Are there any instances in our State where the industries that obtained State Aid loan under this scheme have paid the entire dues by way of loans as well as interest accuring upon it? If so, will the Government be pleased to waive the penal interest that has been levied upon them for delayed payment?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடன் பல தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அவ்வப்பொழுது அது பரிசீலிக்கப்படுகிறது. காலதாமதம் செய்துகொடுத்தால் பீனல் இன்டரஸ்ட் போடப்படுகிறது. பீனல் இன்டரஸ்ட் இல்லையென்றால் பாக்கி அதிகமாகி அதனால் அரசாங்கத்திற்கு அது நஷ்டத்தை ஏற்படுத்தும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் மிகப் பெரிய தொழில்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. சாதாரணத்தொழில்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. எனவே வருங்காலத்திலாவது அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கருத்து தவறான கருத்து. 5,000 ரூபாய் வரையில்கூட கொடுக்கிறார்கள். 50,000 ரூபாய் வரை போர்டிலே கொடுக்கிறார்கள். அதற்கு மேலே அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. சர்க்கார் சிறு தொழில்களுக்கும் கொடுத்துவருகிறது. அங்கங்கே இருக்கின்ற காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸர்கள் 2 ஆயிரம் ரூபாய் அளவில் கொடுக்கிறார்கள். அஸிஸ்டெண்ட் டைரக்டர் 5,000 ரூபாயும் டெபுடி டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் 7,500 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஜாயிண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் 10,000 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். எனவே கீழே உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு அந்தந்த மொஃபஸ்ஸல் சென்டர்களிலே குடிசைத்தொழில்கள் போன்ற தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இப்பொழுதே கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

Scales of pay recommended by U.G.C.

*240 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) whether the Director of Collegiate Education has recommended the extension of the U.G.C. scales of pay to the non-technical teaching staff in the Government professional colleges and to persons on other duty in the State Institute of Education;

(b) whether this Government has applied to the Central Government regarding grant for the same; and

(c) if so, the stage in which the matter stands now?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மத்திய அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்து மாநில அரசு பல்கலைக் கழக மான்யக் குழுவின் அடிப்படை சம்பளம் இந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்கலாமென்று உத்திரவிட்டுள்ளது.